# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை 16.09.2025 கதிர் 311







## சமூக வலைத்தளத்தால் ஏற்பட்ட விபரீதம்: நீதி கோரி கொத்மலையில் போராட்டம்!



கொத்மலை, செப். 16

இளைஞனை தாக்கி, அது தொடர்பான காணொளிகளை சமூக வலைத்தளங்களில் பகிரங்கப்படுத்தி அவரது மரணத்துக்கு காரணமாக இருந்தவர்கள் இதுவரை கைது செய்யப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களை உடன் கைது செய்யுமாறு வலியுறுத்தியும் கொத்மலை பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று போராட்டம் இடம்பெற்றது.

தவலாந்தன்ன சந்தியில் இருந்து கொத்மலை பிரதேச செயலக வளாகம் வரை சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் பேரணியாக சென்ற போராட்டக்காரர்கள், இளைஞனின் மரணத்துக்கு நீதி வேண்டும் என கோஷங்களை எழுப்பினர். பதாகைகளையும் தாங்கி இருந்தனர். கொழும்பில் இருந்து புசல்லாவை, றொக்சைல்ட் பகுதியிலுள்ள தமது வீட்டுக்கு பேருந்தில் வந்த இளைஞன் ஒருவர், நித்திரையால் இடம்மாறி இறங்கி விட்டார்.

அவரை திருடன் என நினைத்து சிலர் தாக்கி இருந்தனர். அது தொடர்பான படங்கள்,

7➤

# இந்திய - இலங்கை உறவை எவராலும் பிரிக்க முடியாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 16**

**"இந்திய - இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டு வருகின்றது. அண்டை நாடுகளாகவும் ஒரு குடும்பமாகவும் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த உறவை எவராலும் பிரிக்க முடியாது." - என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

**இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக இலங்கை - இந்திய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார நிகழ்ச்சி மற்றும் இரவு விருந்தும் நேற்று திங்கட்கிழமை மாலை தாஜ் சமுத்ரா ஹோட்டலில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.**

**இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தனுஜா ஜா ஆகியோரின் அழைப்பின் பேரில் அமைச்சர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.**

நமது நெருங்கிய அண்டை நாடான இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இலங்கை - இந்திய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும், இந்திய அரசுக்கும் மக்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திர தினம் என்பது சுதந்திரத்தின் கொண்டாட்டம் மட்டுமல்ல, ஜனநாயகம் மற்றும் முன்னேற்றத்தின் மதிப்புகளைப் பாதுகாக்க அயராது உழைத்த மக்களின் ஒற்றுமையை நினைவூட்டுகின்றோம்.

இலங்கையர்களாகிய நாம் இந்தியாவின் சாதனைகள் குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்திய - இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாக பேணப்பட்டு வருகின்றது. இலங்கையும் இந்தியாவும் அண்டை நாடுகளாகவும் ஒரு குடும்பமாகவும் பிணைக்கப்பட்டுள்ளன. கலாசார நிகழ்ச்சிகள், கல்வி நடவடிக்கைகள் உட்பட பல துறைகள் மூலம் இந்த நட்பைப் பாதுகாப்பதில் இலங்கை - இந்திய சமூகம் மதிப்புமிக்க பங்கைக் கொண்டுள்ளது.

நாட்டில் சவாலான காலங்களில், மனிதாபிமான உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு ஆதரவை வழங்கியுள்ளது.

நவீன யுகத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு பல துறைகளில் பரவியுள்ளது. இலங்கையின் வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் மற்றொரு எடுத்துக்காட்டு சுகாதாரப் பராமரிப்பு. கொழும்பில் அப்பல்லோ மருத்துவமனைகளை நிறுவுதல் மற்றும் நாட்டில் நன்கொடையாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் சேவையைத் தொடங்குதல் உள்ளிட்ட நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்கு இந்திய அரசு தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றன.

கல்வி மற்றும் கலாசார ஒத்துழைப்பு மற்றும் அரசியல் மற்றும் மூலோபாய உறவுகள், மேலும் உதவித்தொகைகள், பயிற்சித் திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், கலை ஒத்துழைப்புகள், அத்துடன் இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கை மற்றும் இலங்கையின் பிராந்திய ஈடுபாடு போன்ற விடயங்கள் மூலம், இலங்கையும் இந்தியாவும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதில்

7➤

## திலீபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 17

தியாக தீபம் திலீபனின் இரண்டாம்நாள்நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ். நல்லூரில் நடைபெற்றது.

திலீபனின் 38 ஆம்

7➤





## சீனத் தூதுவர் - மைத்திரி சந்திப்பு

கொழும்பு, செப். 16

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கொழும்பு, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ

7➤



## கோர விபத்தில் இளம் பெண் ஒருவர் பலி 7 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்



கொழும்பு, செப். 16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இன்று இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் கலனி கம மற்றும் கஹதுடுவ சந்திப்புகளுக்கு இடையில் இன்று

7➤

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதிய அரச அதிபர் நியமனம்



மட்டக்களப்பு, செப். 16

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிப ராக திருகோணமலையைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலர் ஜே.எஸ். அருள்ராஜ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் 27 ஆம் திகதி

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பருத்தித்துறை துறைமுகம் எமக்கு வேண்டாம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சுப்பர்மடம் மக்கள் சார்பில் மீனவர் சங்க பிரதிநிதிகள், பருத்தித்துறை நகர பிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந. திரிலிங்கநாதன் ஆகியோரை நேரில் சந்தித்து பருத்தித்துறை துறைமுகம் அமையும் பட்சத்தில் ஏற்படும் பிரசினைகளை எடுத்துக் கூறி மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் சிறீவரதன் சுலக்ஸன் மற்றும் பொருளாளர் சிவபாதசுந்தரம் சதீஸ் ஆகியோர் நேற்று திங்கள் கிழமை யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் ஊடக சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்வதால் எமது கிராமமே அழிவடைந்து போகும் அபாயம் உள்ளது. துறைமுகம் அமைக்கப்படும் போது அதற்கு மேற்கு பக்கமாக ஏற்படும் கடலரிப்பிற்கு முகம்கொடுத்து அழிவை சந்திக்கும் முதல் கிராமமாக எமது சுப்பர்மடம் மீனவ கிராமமே காணப்படுகிறது.

1000 கோடி ரூபா செலவில் இந்திய அரசாங்கம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவதற்காக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2018 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முற்பட்ட போது எமது சங்கம் உள்ளிட்ட பல சமூக மட்ட அமைப்புக்களின் குறிப்பாக பருத்தித்துறை துறைமுக சூழலில் காணப்படும் பிரபல பாடசாலைகளின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டது. மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டத்தை தாம் ஒருபோதும் நடைமுறைப்படுத்த மாட்டோம் என ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் கலந்துரையாடிய அதிகாரிகள் உறுதிபடத் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறு மக்கள், சமூக மட்ட அமைப்புகள், பாடசாலை சமூகம் என்பவற்றின் எதிர்ப்பினால் கைவிடப்பட்ட துறைமுக திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த இந்திய அரசு முயல்கிறது.

அருகில் உள்ள மீனவ கிராமங்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடவில்லை, எமக்கு எவருக்குமே அறிவிக்காது தன்னிச்சையாக கூட்டம்கூடி முடிவுகளை எடுத்துவிட்டு அபிவிருத்திக்காக கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்செயற்பாடு எமக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த நடவடிக்கையை நாம் எதிர்க்கிறோம் என்றனர். (ஐ)

# நீதி அமைச்சர் தலைமையில் விசேட குழு ஜெனிவாவிற்கு விஜயம்

கொழும்பு, செப் .16

நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார, பிரதி அமைச்சர் முனீர் மௌலவி உட்பட அந்த அமைச்சின் அதிகாரிகள் கொண்ட விசேட குழு இந்த வாரம் ஜெனிவா செல்கின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறுகின்றது. அதில், பங்கேற்கவே இந்தக் குழு அங்கு செல்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு கடந்த திங்கட்கிழமை ஜெனிவா சென்று இலங்கையின் நிலைப்பாட்டை அறிவித்து, நாடு திரும்பியுள்ளது. இந்தநிலையிலேயே நீதி அமைச்சர் தலைமையில் விசேட குழு ஜெனிவா செல்லவுள்ளது.

இந்தக் குழு ஜெனிவாவில் உள்ளக நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டவும் உள்ளகப் பொறிமுறை விசாரணைகளை வலுப்படுத்தும் செயல்முறைகளை வலுப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# தமிழர் பகுதியில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த காணிகள் விடுவிப்பு!

*கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த முப்பது ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.*

*கடந்த 2009 ஆண்டு முதல் பாதுகாப்பு படையினர் வசமிருந்த தனியார் மற்றும் அரச காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளன.*

*அதன் தொடர்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூனகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 07 ஏக்கர் காணி கடந்த (07-09-2025) அன்று விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.*

*குறித்த காணி தற்காலிகமாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இதே போன்று நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள முட்கொம்பன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த 20 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இயக்கச்சி பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான எட்டுப் பேரின் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.*

*(ஐ)*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மருதானை ரயில் நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டம்



கொழும்பு, செப் .16

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில், **Dream Destination** திட்டத்தின் கீழ் மருதானைரயில்நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'வளமான நாடு – அழகான வாழ்க்கை' உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் படி நிலைபேறான, நவீன மற்றும்தரப்படுத்தப்பட்ட பொது போக்குவரத்து கட்டமைப்புடன் கூடிய அழகான வாழ்க்கை முறையை அடைவதற்காக, ரயில் நிலையங்களில் பொது வசதிகளை மேம்படுத்தல், ரயில் நிலையங்களை வசதியான மற்றும் பாதுகாப்பான இடங்களாக மாற்றும் நோக்கத்துடன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம், தேசிய புத்திஜீவிகள் அமைப்பு அரச-தனியார் பங்களிப்பின் கீழ் நாட்டில் நூறு ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் தேசிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. விசேட தேவைகள் உள்ள சமூகம் உட்பட அனைத்துப் பயணிகளுக்கும் பாதுகாப்பு மற்றும் வசதியை வழங்கும் சுத்தமான, அழகான ரயில் நிலைய கட்டமைப்பை நாட்டில் உருவாக்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து மருதானை ரயில் நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ரயில் நிலையத்தில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதுடன் கட்டுப்பாட்டு அறை உட்பட பல இடங்களையும் பார்வையிட்டார்.

ரயில் திணைக்களத்திற்கே உரித்தான 'ருஹுனு குமாரி' என்ற புதிய சிங்கள கணினி எழுத்துருவும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரயில் நிலையமாக கருதப்படும் மருதானை ரயில் நிலையம், கொழும்பு மாவட்டத்தில் இரண்டாவது பெரிய ரயில் நிலையமாக கருதப்படுகிறது. இந்த நவீனமயமாக்கல் பணிகள், இதன் புராதனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாமல் மேற்கொள்ளப்பட உள்ளன. (ஐ)

## 60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று கிடந்த குளம்! சாவகச்சேரி நகரசபை அதிரடி நடவடிக்கை





சுமார் 60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று இருந்த நகராட்சி மன்றத்தின் குஞ்சர்துரவு குளம் நகராட்சி மன்றத்தினால் ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தின் ஆரம்ப நாளான நேற்றுமீசாலை கிழக்கு வட்டாரத்தில் நகராட்சி மன்றத்தின் நடமாடும் சேவை முன்னெடுக்கப பட்டது.

இதன்போது சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தூர்வாரப்படாமல் நகரசபையின் கண்காணிப்பில் இருந்து விடுபட்ட பழமைவாய்ந்த குஞ்சர்துரவு குளம் உபதவிசாளர் மற்றும், உறுப்பினர்களின் கண்காணிப்பின் கீழ் அதிரடியாக ஒரே நாளில் தூர்வாரப்பட்டுள்ளது.

60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று கிடந்த குளம்! சாவகச்சேரி நகரசபை அதிரடி நடவடிக்கை **| Chavakachcheri Municipal Council Takes Action**

கிராமத்தின் அடையாளமான குஞ்சர்துரவு குளத்தினை தூர்வாரி பாதுகாக்குமாறு கிராம மக்கள் நீண்டகாலமாக நகரசபையிடம் கோரிக்கை முன்வைத்தும்பயனற்ற நிலையில்வட்டார உறுப்பினர் பிரகாஷ் உபதவிசாளர் கிஷோரோடு இணைந்து முன்னெடுத்த முயற்சியின் பயனாக குஞ்சர்துரவு குளம் தூர்வாரப்பட்டுள்ளது.

நகரசபையின் கடந்த மாதாந்த அமர்வில் உபதவிசாளரினால் முன்மொழியப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள், கிணறுகள், கேணிகள், குளங்கள் என்பவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற ஏகமனதான பிரேரணைக்கு அமையவே உள்ளூராட்சி வாரத்தின் முதன்நாளில் குஞ்சர்துரவு குளம் தூர்வாரும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குளம் தூர்வாரும் பணியினை நகரசபை தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ், உபதவிசாளர் ஞா.கிஷோர், செயலாளர் எஸ்.நிசான் ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (ஐ)

## கெஹெல்பத்தரவின் சகா பஸ்தேவா 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு

*கொழும்பு, செப் .16*

*தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கெஹெல்பத்தர பத்மேவின் நெருங்கிய நண்பர் எனக் கூறப்படும் "பஸ்தேவா" என்றழைக்கப்படும் திசாநாயக்க தேவகே திசாநாயக்க என்பவரை பாதுகாப்புச் செயலாளரின்உத்தரவின்பேரில்பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கப்படவுள்ளதாக மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளது.*

*அதன்படி, குறித்த சந்தேக நபர் 90 நாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படவுள்ளதாக நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*"பஸ்தேவா" என்ற சந்தேக நபரை கைது செய்த பின்னர், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில்கெஹெல்பத்தர பத்மேவுக்குச் சொந்தமான ஒரு ஹோட்டலில் இருந்து 440 கிராம் போதைப்பொருள் மற்றும் பல வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் சாட்சியங்களை முன்வைத்த பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபர் கைது செய்யப்பட்ட நேரத்தில் கெஹெல்பத்தர பத்மே வெளிநாட்டில் இருந்ததாகவும், சந்தேக நபர் கைது செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும், கெஹெல்பத்தர பத்மே கோபமடைந்து தலைமை பொலிஸ் பரிசோதகர் லிண்டன் சில்வாவை தொலைபேசியில்மிரட்டியதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*கெஹெல்பத்ர பத்மேவின் வழிகாட்டுதலின் கீழ் இந்த சந்தேக நபர் செய்த குற்றங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தி வருவதாகக் கூறிய பொலிஸார் பாதுகாப்புச் செயலாளரின்உத்தரவின்பேரில், இந்த சந்தேக நபர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார் என்றும் தெரிவித்தனர்.*

*முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில்கொண்ட நீதவான், விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ)*



## மகிந்தவுக்கு உயிராபத்து பாதுகாப்பு கோரும் ரணில் தரப்பு

கொழும்பு, செப் .16

ஒரு சில குழுக்கள் ஆயுதங்களைக் கொண்டு மகிந்த ராஜபக்சவை கொல்லக் கூடிய அச்சுறுத்தல் உள்ளது. எனவே, இலங்கை அரசால் அவர் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசமைப்பு அமெரிக்க மற்றும் பிரான்ஸ் அரசமைப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்கமைய அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவர் பதவிக் காலத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி என அழைக்கப்படுவதில்லை. மாறாக அவர் உயிர் வாழும் வரை பதவி வகித்தல் மற்றும் அதன் பின்னரான நிலைமை ஆகிய இரண்டு மாத்திரமே காணப்படுகின்றது. எமது நாட்டின் அரசமைப்புக்கமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்துக்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் நாட்டுக்காக முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளனர்.

உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச யுத்தத்தை நிறைவு செய்வதற்கு இறுதியாக தலைமை வகித்த அரச தலைவர் என்ற ரீதியில் உலகின் சில நாடுகளுக்குச் சென்று அவரால் தனித்து நாடு திரும்ப முடியாது.

ஒரு சில குழுக்களால் கைகளிலுள்ள ஆயுதங்களைக் கொண்டு கொல்லப்படக் கூடிய அச்சுறுத்தலுடைய தலைவர் மகிந்த ராஜபக்ச ஆவார். எனவே, இலங்கை அரசால் மகிந்த ராஜபக்ச பாதுகாக்கப்பட வேண்டும். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசியல் வரலாற்றில் சகல ஆளும், எதிர்க்கட்சி தலைவர்களும் அகால மரணமடைந்தவர்களாக அல்லது கொலை முயற்சியில் இருந்து தப்பியவர்களாகவே உள்ளனர்.

எனவே, இந்தச் செயல்கள் மூலம் சமூகத்தில் வெறுப்பையும் விரோதத்தையும் உருவாக்குவது இலங்கைக்கு நன்மை அளிக்காது. ஜனநாயக நாடுகள் என்றும் முன்னோக்கியே பயணித்திருக்கின்றன.

நேபாளம் போன்ற நாடுகள் இந்த வரலாறுகளைக் கற்றால் தற்போதைய நிலைமைக்கு உகந்ததாக இருக்கும். இலங்கையில் அரசியல் கலவரம் வெடித்த போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தார்.

அவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட போதிலும், அவர் பயந்து ஓடவில்லை. மாறாக ஏனையோரது வீடுகள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால், நேபாள பிரதமர் அந்த சந்தர்ப்பத்தில் தப்பிச் சென்றதாலேயே ஏனையோர் பாதிக்கப்பட்டனர் என்பதே எனது நிலைப்பாடாகும். எனவே, தேசியத் தலைவர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு அந்தக் கௌரவம் வழங்கப்பட வேண்டும்" என்றார். (ஐ)


# பிரிந்து கிடக்கின்ற சக்திகள் ஒருங்கிணைய வேண்டும் செங்கோட்டையன், சசிகலாவை விரைவில் சந்திப்பேன்



பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாளையொட்டி நேற்று சென்னையில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்த பின் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களிடம் கூறியதாவது: நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு என்ன தேவையோ அதற்காகத்தான் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் ஆட்சியை நடத்தி வந்தார்கள். அந்த சாதனை மீண்டும் தொடர வேண்டும் என்றால் பிரிந்து கிடக்கின்ற அதிமுக சக்திகள் ஒருங்கிணைந்தால்தான் அது சாத்தியமாகும் என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தொண்டர்கள், தமிழக மக்களின் உணர்வுகளையும் மதித்து, நடந்து பிரிந்து கிடக்கின்ற அதிமுக சக்திகள் ஒன்றிணைய வேண்டும் என்று அண்ணா பிறந்த நாளில் சபதம் ஏற்போம். ஒரு சாதாரண தொண்டன்கூட பொதுச்செயலாளராக வரலாம் என்று சட்டவிதி இருந்தது. அந்த விதியை இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.

அதிமுக ஒன்றிணைய வேண்டும். தலைவர்கள் இணையவில்லை என்று சொன்னால் தொண்டர்கள் இணைந்து அதிமுகவை காப்பாற்றுவார்கள். செங்கோட்டையனிடம் நான் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன். அவரும் என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறார். சசிகலாவை சந்திக்கும் வாய்ப்பும் இருக்கிறது. தமிழக பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரனும் நானும் பேசிக் கொண்டிருக்கிறோம். அரசியலில் இதுவரை வந்திருப்பவர்கள், வந்து கொண்டிருப்பவர்கள் (விஜய்) அனைவரும் எம்ஜிஆர், ஜெயலலிதா தாரக மந்திரத்தைத்தான் சொல்லியாக வேண்டும். அப்போதுதான் அரசியலில் அவர்கள் வெற்றிபெற முடியும். பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட அதிமுக சட்டவிதிகள் வந்தால் அனைத்தும் சாத்தியப்படும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## முதியவரிடம் இருந்து கோரிக்கை மனுவை வாங்க மறுத்த ஒன்றிய அமைச்சர் சுரேஷ் கோபி: திருச்சூர் அருகே நடந்த கூட்டத்தில் பரபரப்பு




திருச்சூர் அருகே நடந்த ஒரு கூட்டத்தில் வீடு கட்ட உதவ கோரி ஒரு முதியவர் கொடுத்த மனுவை ஒன்றிய இணை அமைச்சர் சுரேஷ் கோபி வாங்க மறுத்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள நாட்டிகா என்ற பகுதியில் நட்பு சபை கூட்டம் நடந்தது. இந்தக்கூட்டத்தை பிரபல மலையாள சினிமா இயக்குனர் சத்யன் அந்திக்காடு தொடங்கி வைத்தார். கூட்டத்தில் அப்பகுதியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். அப்போது கொச்சு வேலாயுதன் என்ற முதியவர் ஒரு கோரிக்கை மனுவுடன் அங்கு வந்தார்.

சுரேஷ் கோபியை சந்தித்த அவர், தென்னை மரம் விழுந்து தன்னுடைய வீடு சேதமடைந்து விட்டதாகவும், அதை சீரமைக்க உதவ வேண்டும் என்றும் கூறி மனுவை கொடுத்தார். ஆனால் மனுவை வாங்க மறுத்த சுரேஷ் கோபி, வீடு கட்டிக் கொடுப்பது தன்னுடைய வேலையல்ல என்றும், மாநில அரசு தான் அந்த வேலையைசெய்யவேண்டும் என்றும் கூறி முதியவரை திருப்பி அனுப்பி வைத்தார். இது அந்த முதியவருக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியது. இதற்கிடையே கொச்சு வேலாயுதனுக்கு வீடு கட்டிக் கொடுக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது. திருச்சூர் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி செயலாளரான அப்துல் வகாப், கொச்சு வேலாயுதனின் வீட்டுக்கு சென்று கட்சியின் சார்பில் வீடு கட்டித் தருவதாக உறுதியளித்தார்.

இந்த விவகாரம் குறித்து சுரேஷ் கோபி கூறியது: வீடு கட்டிக் கொடுப்பது மாநில அரசின் வேலையாகும். தனி ஒரு ஆளாக அதை செய்ய முடியாது என்றார். (ஐ)

## விஜய் மீது சீமான் விமர்சனம்





மக்கள் பிரச்சினைகளை எழுதி வைத்துப் படிப்பது என்பது சரியானது அல்ல என்று த.வெ.க. தலைவர் விஜய் மீது நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு ஊரிலும் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை சொல்லும்போது இதயத்தில் இருந்து வரவேண்டும். அதை எழுதி வைத்துப் படிப்பது என்பது சரியானது அல்ல. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் எழுதி கொடுத்தால் கூட, மேடையில் ஏறி இதுதான் பிரச்சினை என்பதை படித்து காட்டிவிட்டு சென்றுவிடுவாரே.

தி.மு.க, அ.தி.மு.கவை விட த.வெ.க. தலைவர் விஜய்யை எதிர்ப்பதையே நான் மும்முரம் காட்டுவதாக சொல்கின்றனர். தி.மு.கவை நிறுவியவர் அண்ணா. அ.தி.மு.கவை நிறுவியவர் எம்.ஜி.ஆர். விஜய் இவர்கள் இருவரையும் சேர்த்து தூக்கிக் கொண்டு வருகிறார். இருவரின் படத்தை மேடையில் வைத்துவிட்டால் மட்டும் போதுமா?

அண்ணா மீது எனக்கு பெருமதிப்பு உண்டு. அவரது ஆட்சியில் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. அண்ணா அரசியலுக்கு வந்த பிறகு தான் தமிழரின் வரலாறு, இலக்கியம் எல்லாம் அரசியல் மேடையில் பேசப்பட்டது. அந்தப் பெருமை அண்ணாவையே சேரும். அவரை பற்றி ஒரு அரை மணி நேரமாவது பேச வேண்டாமா?

இலங்கை தமிழர் விடுதலைக்கு உதவிய எம்.ஜிஆரை போற்றுகிறோம். அதேநேரம் தமிழகத்தில் கல்வியை, மருத்துவத்தை தனியார் மயப்படுத்தியது, தமிழில் இருந்து ஆங்கிலத்தை பயிற்று மொழியாக மாற்றியது, முல்லை பெரியாறு அணையை கேரளாவுக்கு தாரைவார்த்தது எல்லாமே எம்.ஜி.ஆர். தானே. அதை ஏற்க முடியுமா?

இதைப் பற்றியும் விஜய் பேச வேண்டும் அல்லவா? நானும் சினிமாவில் இருந்துதான் வந்திருக்கிறேன். ஆனால், களத்தில் நான் மக்களை சந்திக்கிறேன். அவர் ரசிகர்களை சந்திக்கிறார் என்று சீமான் கூறினார். (ஐ)

## மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: குகி தலைவரின் வீடு தீ வைத்து எரிப்பு பிரதமர் மோடி சென்ற அடுத்த நாளே சம்பவம்

மணிப்பூருக்கு பிரதமர் மோடி சென்று வந்த ஒருநாளுக்கு பிறகு குகி அமைப்பின் தலைவரின் வீடு மர்ம கும்பலால் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மணிப்பூரில் மெய்தி மற்றும் குகி சமூகத்தினர் இடையே ஏற்பட மோதல் இனக்கலவரமாக வெடித்து கடந்த 2 ஆண்டுக்கும் மேலாக பதற்றம் நீடித்து வருகிறது. கடந்த 4ம் தேதி குகி தேசிய அமைப்பு மற்றும் குகி-ஸோ கவுன்சில் ஆகிய 2 அமைப்புகள் ஒன்றிய அரசுடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இதில், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பயணிகளின் இயக்கத்திற்கு தேசிய நெடுஞ்சாலை-2ஐ மீண்டும் திறக்க ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் இது அமைதி முயற்சியில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் என ஒன்றிய அரசு நம்பிக்கை தெரிவித்திருந்தது. இந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து, பிரதமர் மோடி 2 ஆண்டில் முதல்முறையாக கடந்த 13ம் தேதி மணிப்பூரின் சூரசந்த்பூர் மற்றும் இம்பாலுக்கு சென்று வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிலையில், பிரதமர் மோடி சென்று வந்த அடுத்த நாளே, கடந்த 14ம் தேதி சூரசந்த்பூரில் உள்ள குகி தேசிய அமைப்பின் தலைவர் கால்வின் அய்கெந்தாங்கின் வீடு மர்ம நபர்களால் தீ வைத்து தீக்கிரையாக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதே போல, குகி ஸோ கவுன்சில் மற்றும் பழங்குடியின தலைவர்கள் அமைப்பின் செய்தித் தொடர்பாளராக இருக்கும் மற்றொரு குகி தலைவரான கின்சா வுல்சோங்கியின் வீடும் மர்ம நபர்களால் குறிவைக்கப்பட்டதாகவும், சரியான நேரத்தில் உள்ளூர் மக்கள் திரண்டதால் மர்ம நபர்கள் ஓடிவிட்டதாகவும் அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், மின்கசிவு காரணமாக கால்வின் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டதாக உள்ளூர் மக்களில் சிலர் கூறுகின்றனர்.

தேசிய நெடுஞ்சாலை-2 திறக்கப்படும் என ஒன்றிய அரசு அறிவித்த நிலையில், இத்தகவலை குகி-ஸோ கவுன்சில் நேற்று மறுத்துள்ளது. அதன் அறிக்கையில், ‘தேசிய நெடுஞ்சாலை-2ஐ மீண்டும் திறப்பதாக அறிவிக்கவில்லை. இப்பாதையில் எந்த சுதந்திரமான போக்குவரத்தும் அனுமதிக்கப்படவில்லை. இப்பாதையில் பயணிப்பவர்கள் பாதுகாப்பை உறுதிபடுத்த பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்பு அளிப்போம் என்று மட்டுமே நாங்கள் கூறி உள்ளோம். இந்த விஷயத்தில் ஒன்றிய அரசின் அறிக்கை தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே, மெய்தி, குகி-சோ சமூகங்களுக்கு இடையேயான மோதலுக்கு இன்னும் தீர்வு ஏற்படாததால் இரு தரப்பிலிருந்தும் யாரும் எந்த சூழ்நிலையிலும் எதிரெதிர் பகுதிக்குள் நுழையக் கூடாது. குகி-ஸோ பகுதிகள் மதிக்கப்பட்ட வேண்டும். எந்தவொரு மீறலும் கடுமையான விளைவுகளுக்கும், அமைதி, பாதுகாப்பை மேலும் மோசமடையவும் செய்யும்’ என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# ரஷ்யப் புரட்சியில் பெண்களும் லெனின் எனும் நாயகனும்!

குடும்பம் என்கிற கட்டமைப்பு, அதிகாரத்திற்கு அடிபணியும் பண்பை வளர்க்கிறது. திருமணம் என்பது இரு நபர்களின் கூட்டுறவாக காண்பிக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் ஆண் மட்டும் குடும்பத்தில் தலைவனாக அடையாளப்படுத்தப்படுகிறான்.

அவனின் பெண் துணையும் குழந்தைகளும் பொருளாதார ரீதியாக அவனை சார்ந்திருக்கும் நிலையில் உள்ளனர். பெண்கள் சம்பாதித்தாலும்கூட அவர்களின் தொழில்கள், மேலதிக வருமானம் தரக்கூடியவையாக மட்டும் பார்க்கப்படுகின்றன. பெண்களின் பிரதான தொழில் வீட்டையும் குழந்தைகளையும் பராமரிப்பதே என்று இன்றளவிலும் சமூகத்தில் பரவலாக சொல்லப்படும் கருத்தியலாக இருக்கிறது.



1973 இல் பெண்ணியமும் சமவுடைமையும் என்ற கட்டுரைத் தொகுப்பில் டயான் பீலி **(Dianne Feely)**, அரசாங்க உதவித்தொகைகளை **( State benefits)** எதிர்பார்த்து இருக்கும் குடும்பங்களை, சமூகம் 'ஒட்டுண்ணிகள்' எனவும் மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சும் சோம்பேறிகளாக தூற்றப்படுகின்றனர் எனவும் குறிப்பிடுகிறார்.




சமூகமானது, சிறுவயது முதலே தன் சமூக அங்கத்தவர்களை பராமரிக்கும் பொறுப்பை தன்னகத்தே கொண்டிருக்குமாயின், தனிக்குடும்பங்கள் மீது தற்போது உள்ள பொருளாதாரச் சுமை இருக்காது. குழந்தைப்பருவம் முதல் மனிதர்களை பராமரிக்கும் பொறுப்பை சமூகம் ஏற்றுக் கொள்ளுமாயின் சமூக மற்றும் வர்க்க வேறுபாடுகள் நம் சமூகத்தில் நிலவியது. குடும்பம் என்ற அலகை கடுமையாக விமர்சித்த டயன், இளைஞர்களும் பெற்றோரும் குடும்பம் என்ற கட்டமைப்பால் பாதிக்கப்பட்டவர்கள் என்கிறார்.

அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்கான பொறுப்புக்களை முழுமையாக ஏற்றுக் கொள்வது தாய்மார்களே. அன்றைய காலகட்டத்திலிருந்து பெருமளவு நாம் மாறி விடவில்லை. இன்றும் கூட குழந்தைகள் நோய்வாய்ப்படும் போது, தாய்மார்களே அருகில் இருந்து கவனித்துக் கொள்கின்றனர். வேலைக்கு போகும் பெண்கள்கூட விடுப்பு எடுத்துக் கொண்டோ அல்லது பணிகளை சீக்கிரமாக முடித்துக் கொண்டோ குழந்தைகளை கவனித்துக் கொள்கின்றனர். ஆண்கள் ஆங்காங்கே குழந்தை பராமரிப்பு வேலைகளை செய்தாலும், பெரும்பாலும் பெண்களே குழந்தைகள் உடல்நலம் குன்றும்போது முதன்மையாக செயற்படுகின்றனர். குடும்பம் என்கிற கட்டமைப்பு வழக்கொழிந்து வேறு சமூக அமைப்புக்கள் தோன்றும் பட்சத்தில், பொருளாதார மற்றும் சட்ட ரீதியான பிணைப்புகள் அழிந்து விடும். ஆனால் மக்கள் தொடர்ந்து கூட்டாகவோ இணையர்களாகவோ சேர்ந்து வாழ்வார்கள். ஆனால் அவர்கள் வெறுமனே திருமண சான்றிதழுக்காகவும் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் வாழப்போவதில்லை.

டயன், 1917 இல் ரஷ்யப் புரட்சியின் லெனின் ஆட்சியில் பெண்களுக்கு கிடைத்த அரசியல் மற்றும் சட்ட உரிமைகள் பற்றி விதந்துரைத்துள்ளார். இனி ரஷ்ய புரட்சி பற்றி சற்றுப் பார்ப்போம். பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்க விடுதலைப் போரும் தொழிலாளி வர்க்க சித்தாந்தமான மார்க்சியத்தின் தோற்றமும் ஒரு பொற்காலத்தை உருவாக்கியது என்றே கூறலாம். ஜெர்மன் தத்துவம், பிரெஞ்சு சோஷலிசம், பிரிட்டிஷ் பொருளாதாரம் என்கிற மூன்று உள்ளடக்கக் கூறுகளும் கொண்ட மார்க்சியம், தொழிலாளர் வர்க்க உணர்வை ஊட்டியது. 1848ல் மார்க்ஸ் - எங்கெல்ஸ் எழுதி வெளியான கம்யூனிஸ்ட் அறிக்கை ஒரு மைல்கல். இவை எல்லாம் உருவாக்கிய பின்புலத்தில்தான் ரஷ்யப் புரட்சி நடந்தது.

1917 பிப்ரவரியில் நிகழ்ந்த ரஷ்யப் புரட்சியில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பெண்கள் முன்னணியில் நின்று போராடியது, அரசியலில் பெண்கள் பங்கேற்பு பற்றிய மாற்று பார்வைக்கும் சிந்தனைக்கும் வழிவகுத்தது.

நகரங்கள், கிராமங்களில் இருந்தும் படித்த பெண்களும், விவசாயப் பெண்களும், பெண் தொழிலாளிகளும் தெருவிலிறங்கி கொடுங்கோலன் ஜார் மன்னனின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரப் போராடினர். கிராமங்களில் பெண்கள், பல நூற்றாண்டுகளாக அக்கிரமம் செய்த நிலப்பிரபுக்களை ஓட ஓட விரட்டியடித்தனர். பெண்கள் செங்கொடியையும் கம்யூனிசத்தையும் தூக்கிப் பிடித்தனர் என வரலாற்று பதிவுகள் கூறுகின்றன. புரட்சிக்குப் பின்னர் ஆண்களுக்கு சமமாக அனைத்து துறைகளில் பெண்களும் சாதிக்க முடியும் என்பதையும் சோவியத் ஒன்றியம் நிரூபித்தது.



லெனின், மக்களிடம் தகித்துக் கொண்டிருந்த புரட்சிகர உணர்வுகளை சரியாக அடையாளம் கண்டு, பக்குவப்படுத்தி, முறைப்படுத்தி, தொழிலாளி வர்க்கப் புரட்சியாய், மார்க்சிய வழியில் முன்னெடுத்தார். ரஷ்யாவில் உருவான சோஷியல் ஜனநாயக கட்சியில், கொள்கை ரீதியில் ஏற்பட்ட பிளவு, மென்செவிக் (சிறுபான்மை), போல்செவிக் (பெரும்பான்மை) எனும் இருபிரிவினரை ஏற்படுத்தியது. போல்செவிக் கட்சியினர் மார்க்ஸிய கோட்பாடுகளின் அடிப்படையில் முதலாளித்துவ ஜனநாயகத்தை தீவிரமாக எதிர்த்தனர். விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டு, வறிய விவசாயிகளும், தொழிலாளர்களும் சேர்ந்து அமைக்கும் பொதுமக்கள் குடியரசே அவசியம் எனக் கூறி அவர்களைத் தம் வசப்படுத்தினர். அரசு சிதறும் பட்சத்தில் அதனைக் கைப்பற்றும் வகையில் சூழ்நிலைகள் அமையப்பெற்றன. இதனால் ரஷ்யாவின் சூழ்நிலைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, தொழிலாளர் அரசாங்கம் ஒன்றினை அவர்களால் உருவாக்க முடிந்தது. புரட்சியை ஏற்படுத்தக்கூடிய ஓர் பேரியக்கமாக போல்செவிக் கட்சியை மாற்றியமைத்தவர் அதன் தலைவர் லெனின் ஆவார். இது ரஷ்ய கம்யூனிச கட்சியாக பெயர் மாற்றம் பெறுகிறது.

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியால் குறுகிய காலத்தில் ரஷ்யாவில் எழுத்தறிவின்மையையும் வறுமையையும் ஒழிக்க முடிந்தது. ரஷ்யாவின் பொருளாதாரமும் வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப் பெற்றன. வாக்குரிமை தொடங்கி ஊதியம் வரை, பெண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டன. தொழிற்சாலைகளும் வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன. நிலப் பிரபுக்கள், மத நிறுவனங்கள் போன்றோரின் நிலங்களைக் கைப்பற்றி, விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், 'அனைத்து நிலங்களும் அரசுக்கே சொந்தம்' எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கமாக லெனின் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்படுகிறது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்ததாக 8 மணி நேர வேலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அடுத்த ஓராண்டு காலத்துக்குள் பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வரலாற்றுப் புகழ்பெற்ற அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் ரஷ்யாவில் நிறைவேற்றப்பட்டன. 18 வயது நிரம்பிய, வெளியில் வேலை செய்து அல்லது தனது வீட்டு வேலைகளைச்செய்து உழைத்து வாழ்கிற ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமையும் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் அளிக்கப்பட்டது.

ஆண் - பெண் வேறுபாடு இல்லாமல் சம வேலைக்குச் சம ஊதியம், வேலை பெறும் உரிமை உள்ளிட்ட ஆண் - பெண் சமத்துவம் உறுதி செய்யப்பட்டது. கருவுற்ற பெண் தொழிலாளர்களுக்கு மகப் பேறுக்கு முன்னர் இரு மாதமும், பின் இரு மாதமும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை, குழந்தைப் பிறப்புக்கு முன்னும், பின்னும் தனிச் சிறப்பான பராமரிப்புகள், வேலையின்போதும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான இடைவேளைகள், பணியாற்றுமிடத்தில் ஓய்வறைகள், பண உதவிகள் உள்ளிட்ட உரிமைகள் சட்டமாக்கப்பட்டன.

திருமணம் - விவாகரத்து போன்றவற்றிலிருந்து மதம் விலக்கப்பட்டது. இருதரப்பும் விவாகரத்துக்கு உடன்பாட்டால், உடனடியாக விவாகரத்து வழங்கப்பட்டது. ஒருவர் மட்டும் விவாகரத்து கோரி நின்றால், இரண்டு மாதங்கள் காத்திருப்பு காலமாக இருந்தது. திருமணமும் விவாகரத்தும் தனிப்பட்ட விவகாரங்களாக மாறின.

கருக்கலைப்பு தண்டனைக்கு உரிய குற்றம் என்கிற முந்தைய சட்டம் களையப்பட்டு, கருக்கலைப்பு சட்டபூர்வமானது. அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான கருக்கலைப்புக்கான வசதிகள் தொடங்கப்பட்டன.

மேலும் 'யாருக்கும் காயம் ஏற்படுத்தாமலும், யாருடைய நலன்களையும் ஆக்கிரமிக்காமலும் உள்ள உடலுறவு விஷயத்தில் அரசோ, சமுதாயமோ தலையிடக் கூடாது' என்பது அரசின் கொள்கையானது.

லெனின் அரசு, சலவை நிலையங்களையும் பொதுச் சமையலறைகளும் **(Communal Laundries and Kitchens)** நிறுவியது. அத்துடன் குழந்தை காப்பகங்கள் அமைத்துக் கொள்வது முதன்மைப் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. டயனின், 'பெண்களும் ரஷ்ய புரட்சியும்' என்கிற மற்றுமொரு கட்டுரையில், 1920களில் இது சம்பந்தமாக மேற் கொள்ளபட்ட உணவு தயாரிப்பு பற்றிய ஆய்வொன்றைக் குறிப்பிடுகிறார். ரஷ்யாவில் உணவு தயாரிப்புக்கு 36 மில்லியன் மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது எனக் கூறிய அந்த ஆய்வு, பொது சமையலறைகள் மூலம் பெறப்படும் தொழில்மயமாக்கம், உணவு தயாரிப்புக்கு வெறும் 6 மில்லியன் மணித்தியாலங்களையே எடுத்துக் கொள்கிறது எனக் கூறுகிறது.

1919 இல் மொஸ்கோவில் பெண் தொழிலாளர்கள் காங்கிரஸ் கருத்தரங்கு உரையில், "பெண்கள் முழு உரிமைகளை பெற்றாலும்கூட, வீட்டு வேலை என்பது அவர்களிடம் விடப்பட்டுள்ளதால் அவர்கள் தாழ்த்தப்பட்ட

(7ஆம் பக்கம் பார்க்க..)

# தோகா உச்சி மாநாட்டில் பரபரப்பு இஸ்ரேல் மீது கடுமையான ஒருங்கிணைந்த நடவடிக்கை: ஒன்றுகூடிய அரபு–இஸ்லாமிய நாடுகள்



இஸ்ரேல்–ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர இரு தரப்பிலும் மத்தியஸ்தம் செய்வதில் கத்தார் முக்கிய பங்கு வகிக்கிறது. சமீபத்தில் கத்தார் தலைநகர் தோகாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் திடீர் தாக்குதல் நடத்தி, 5 ஹமாஸ் தலைவர்கள் உட்பட 6 பேரை கொன்றது. இந்த தாக்குதல் குறித்து முன்கூட்டியே அமெரிக்காவிடம் இஸ்ரேல் தகவல் தெரிவித்திருந்தது.

இதற்கு கத்தார் கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும், இஸ்ரேலுக்கு எதிராக பதில் நடவடிக்கை குறித்து முடிவெடுக்க கத்தார் தலைநகர் தோகாவில் பிரமாண்ட உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் அனைத்து அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் பங்கேற்றன.

ஆசியாவில் இருந்து பாகிஸ்தான் உட்பட 27 நாடுகளும், ஆப்ரிக்காவில் இருந்து 27 நாடுகள் உட்பட 57 அரபு-இஸ்லாமிய நாடுகளின் தோகா உச்சி மாநாடு நேற்று நடந்தது.

மாநாட்டை தொடங்கி வைத்த கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல் தானி, “காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை பற்றி இஸ்ரேல் கவலைப்படவில்லை. அதற்கு பதிலாக காசா இனி வாழத் தகுதியற்றதாக இருப்பதை உறுதி செய்வதை மட்டுமே நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. ஹமாஸ் தலைவர்களை படுகொலை செய்ய விரும்பினால் இஸ்ரேல் ஏன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்?” என ஆவேசமாக பேசினார்.

ஈரான், அஜர்பைஜான், துருக்கி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் இஸ்ரேலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். இஸ்ரேலுக்கு அரபு-இஸ்லாமிய நாடுகள் ஒருங்கிணைந்த வலுவான உறுதியான பதிலடி தர வேண்டுமென வலியுறுத்தினர். நேட்டோ போல அரபு-இஸ்லாமிய நாடுகளுக்கென தனி பாதுகாப்பு அமைப்பை உருவாக்கவும் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

## நேபாளத்தில் இடைக்கால அமைச்சரவையில் 3 புதிய அமைச்சர்கள் பதவியேற்பு



நேபாளத்தில் இடைக்கால அரசின் அமைச்சரவையில் நேற்று மூன்று புதிய அமைச்சர்கள் பதவியேற்றுக்கொண்டனர். நேபாளத்தின் சமூக ஊடகங்கள் மீதான தடை காரணமாக கடந்த 8ம் தேதி போராட்டம் வெடித்தது. ஜென்-இசட்பிரிவின் இந்த போராட்டம் வன்முறையாக மாறியது. நாடு முழுவதும் வெடித்த வன்முறை சம்பவங்களில் சுமார் 72 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இளைஞர்களின் போராட்டத்துக்கு பணிந்து கடந்த வாரம் பிரதமர் சர்மா ஒலி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து சர்மா ஒலி தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

போராட்டக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இடைக்கால பிரதமராக முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சுசிலா கார்க்கி தேர்வு செய்யப்பட்டார். தொடர்ந்து கடந்த 12ம் தேதி சுசீலா கார்க்கி நேபாளத்தின் முதல் பெண் பிரதமராக பொறுப்பேற்றார். இந்நிலையில் இடைக்கார அரசின் அமைச்சரவையில் 3 புதிய அமைச்சர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். குல்மான் கிசிங், ரமேஷ்வர் கானல் மற்றும் ஓம் பிரகாஷ் ஆர்யல் ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து நேற்று புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெற்றது. மஹர்ஜ்கஞ்சில் ஷீத்தல் நிவாஸில் உள்ள அதிபர் அலுவலகத்தில் நடந்த விழாவில் அதிபர் ராமச்சந்திர பவ்டெல் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். (ஐ)

## நேட்டோ, ஜி7 நாடுகள் டிரம்ப் பேச்சை கேட்டு வரி விதித்தால் பதிலடி தரப்படும் சீனா எச்சரிக்கை



அமெரிக்க அதிபர் டிரம்ப் அழைப்புக்கு செவி சாய்த்தால் எதிர் நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ஜி7, நேட்டோ நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. ‘ரஷ்யாவிடம் அதிகமான கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா மீது 50மூ முதல் 100மூ வரி விதிக்க வேண்டும். இதன் மூலம் உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதில்பங்கு வகிப்பதில் சீனாவுக்கு அழுத்தம் தர முடியும்’ என அமெரிக்க அதிபர் டிரம்ப் ஜி7 மற்றும் நேட்டோ நாடுகளிடம் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் நேற்று அளித்த பேட்டியில், “உலகெங்கிலும் உள்ள நாடுகளுடனான சீனாவின் பொருளாதார மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பு சட்டப்பூர்வமானது, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது. உக்ரைன் போரை பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என்பதே சீனாவின் மாறாத நிலைப்பாடு. ஆனால், சீனாவுக்கு எதிராக அமெரிக்கா விடுத்த அழைப்பு ஒருதலைப்பட்சமானது, வஞ்சிக்கக் கூடியது.

இது அமெரிக்காவின் வழக்கமான பொருளாதார வற்புறுத்தல் நடவடிக்கை. இதற்கு செவி சாய்ப்பவர்கள் எதிர் நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்” என கூறி உள்ளார். பொருளாதார, வர்த்தக பிரச்னைகளை தீர்க்க 2வது நாளாக ஸ்பெயினில் சீனா, அமெரிக்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் சீனா இத்தகைய பதிலளித்திருப்பது குறிப்பிடத்தக்கது .(ஐ)

# இந்தியாவுடனான நட்பை பிரிக்க முடியாது அமெரிக்காவின் முயற்சி நிச்சயம் தோற்கும்: ரஷ்யா திட்டவட்ட அறிவிப்பு



அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு மத்தியில், இந்தியாவுடனான உறவை சீர்குலைக்கும் எந்தவொரு முயற்சியும் நிச்சயம் தோல்வியடையும் என ரஷ்யா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா விலகி இருக்க வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது. குறிப்பாக, ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை காரணம் காட்டி, இந்தியப் பொருட்கள் மீது 50 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கும் நடவடிக்கைகளையும் டிரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. இந்தச் சூழலில், இந்தியாவுடனான தங்களது நட்புறவை சீர்குலைக்க நினைக்கும் எந்தவொரு முயற்சியும் நிச்சயம் தோல்வியிலேயே முடியும் என ரஷ்யா கடுமையாக பதிலடி கொடுத்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல், இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவதை பாராட்டுகிறோம். சர்வதேச விவகாரங்களில் இந்தியா கடைப்பிடிக்கும் யுக்தி சார்ந்த தன்னாட்சியும், நீண்டகால நட்பின் பாரம்பரியமுமே இதற்குக் காரணம். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு, இறையாண்மை மற்றும் தேசிய நலன்களின் அடிப்படையில் நம்பகத்தன்மையுடனும், கணிக்கக்கூடிய வகையிலும், உண்மையான யுக்தி சார்ந்த தன்மையுடனும் திடமாக முன்னேறி வருகிறது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களையும் மீறி, இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எரிசக்தி இறக்குமதியை நிறுத்தவில்லை. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி, சீனாவின் இறக்குமதி அளவை நெருங்கியுள்ளது. மேலும், ரஷ்யாவுடன் உயர் மட்ட அளவிலான தூதரக உறவுகளையும், பாதுகாப்பு ஒத்துழைப்பையும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாலை 8 பேரை ஏற்றிச் சென்ற வான் ஒன்று குளிர்சாதனப் பெட்டியுடன் கூடிய லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் 32 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் நால்வர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பெண் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். காயமடைந்த மற்ற மூவரும் சிறுவர்கள் எனவும், அவர்கள் மூவரும் தற்போது களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

13, 11 மற்றும் 7 வயதுடைய மூன்று குழந்தைகள் இவ்வாறு காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். உயிரிழந்த பெண் வணிகத்துறையில் பணிபுரிந்து வருபவர் ஆவார்.

புஷ்பகுமாரி சந்தமாலி (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ள மேற்படி பெண், டிசம்பர் மாதம் திருமணம் செய்யத் தயாராக இருந்தார் என்று தெரியவந்துள்ளது.

ஹோமாகம வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் பெண், வெளிநாட்டில் இருந்து தனது வருங்கால கணவரை அழைத்து வருவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளம் பெண் வானின் முன் இடது இருக்கையில் பயணித்தார் எனவும், அவர் திருமணம் செய்து கொள்ளவிருந்த இளைஞர் வானின் ஓட்டுநராக இருந்தார் எனவும், அவரும் விபத்தில் படுகாயமடைந்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் வான் கடுமையாக சேதமடைந்துள்ளது என்றும், லொறியின் பின்புற வலது பக்கம் சிறிய சேதத்தைச் சந்தித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பாக லொறியின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். வானின் ஓட்டுநர் நித்திரை கொண்டதால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமது கடமையை உத்தியோகபூர்வமாக ஏற்கவுள்ளார்.

தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் செயலாளராகக் கடமை புரிந்து வரும் இவர் அதற்கு முன்னர் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றி இருந்தார்.

## திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டு நினைவேந்தல் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம் – நல்லூர் வீதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவாலயத்தில் இன்று காலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

## சீனத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை குறித்து இதன்போது கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு முன்பு, கொழும்பில் உள்ள சீனத் தூதுவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணொளிகள் சமூகவலைத்தளங்களில் வெளியாக இருந்தன. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான இளைஞன், தவறான முடிவெடுத்து தற்கொலை செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இச்சம்பவம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தி றொச்சைல்ட் தோட்டப் பகுதியில் இருந்து கொத்மலைக்கு வந்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெற்ற பிரதேச செயலக வளாகத்துக்கு கொத்மலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரத்நாயக்க வருகை தந்திருந்தார். போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி, பதற்ற நிலைமையை கட்டுப்படுத்தினார்.

போராட்டம் நடத்தியவர்களில் ஏழு பேருக்கு பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதன்போது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் தரப்பில் உறுதியளிக்கப்பட்டதையடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோளோடு தோள் நிற்கின்றன.

பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை உறுதி செய்யும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தியா தனது 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில், இலங்கை கடந்த காலத்தை மட்டுமல்ல, எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில், வர்த்தகம், கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார பரிமாற்றம் ஆகிய துறைகளில் நாம் தொடர்ந்து உறவுகளை உருவாக்க வேண்டும். , முக்கியமாக, பல நூற்றாண்டுகளாக நம்மை வழிநடத்தி வரும் நம்பிக்கை, மரியாதை மற்றும் நட்பின் மதிப்புகளை நாம் தொடர்ந்து வளர்க்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பம் இந்தியாவின் சுதந்திரத்தைக் கொண்டாடுவதுமட்டுமல்ல, இருநாடுகளுக்குமிடையிலான நீடித்த நட்பை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும், 79 ஆவது சுதந்திர தினத்தன்று, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிரிக்க முடியாத பரஸ்பர உறவு மற்றும் ஒத்துழைப்புப் பயணத்தில் இந்தியக் குடியரசுக்கு இலங்கை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இலங்கை – இந்திய சங்கம் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான சமூக மற்றும் கலாசார உறவுகளை வளர்ப்பதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகளில் இந்தியா ஒரு முன்னணி பங்காளியாக உள்ளது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான இன மற்றும் கலாசார உறவுகள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கும் மேலானவை.” – என்றார்.

இலங்கை – இந்திய சங்கத் தலைவர் யமுனா கணேசலிங்கம், செயலாளர் சரவணன் நீலகண்டன், துணைத் தலைவர் ரெங்கநாதன் மற்றும் இலங்கை – இந்திய சங்க உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஜனநாயகம் பற்றி பாடமெடுக்கும் ஜே.வி.பி. முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்டட்டுமாம்

## இப்படி மஹிந்தவின் கட்சி சவால்

*கொழும்பு, செப். 16*

*“கடந்த நல்லாட்சி காலத்தில் மாகாண சபைத் தேர்தல் மாயமாவதற்கு ஜே.வி.பியும் துணை நின்றது. இன்று ஜனநாயகம் பற்றி பாடமெடுக்கும் அந்தக் கட்சி முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்.” – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வலியுறுத்தியுள்ளது. அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,*

*“30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்த பிறகு வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குரிய வாய்ப்பை மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொடுத்தார். தோல்வியெனத் தெரிந்தும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி, சபையை ஸ்தாபித்தார்.*

*ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பன இணைந்தே 2015 இல் நல்லாட்சியை உருவாக்கின. எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எழுச்சிக்கு அஞ்சி, மாகாண சபைத் தேர்தல் காணாமல் ஆக்கப்பட்டது. அரசுக்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாதபோது அதற்கு ஜே.வி.பி. ஆதரவளித்தது. அந்தவகையில் தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சிக்கு ஜே.வி.பியும் துணை நின்றுள்ளது. இன்று ஜனநாயகம் பற்றி அந்தக் கட்சியினர் பாடம் எடுக்கின்றனர். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்.” – என்றார்.*

# அரச அதிகாரிகளின் அலுவலகப் பணிகளை எளிதாக மாற்ற டிஜிட்டல் கையொப்பம்!

அரச அதிகாரிகளுக்கு அலுவலகப் பணிகளை எளிதானதாகவும் வினைத்திறனானதாகவும் மாற்ற டிஜிட்டல் கையொப்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அலுவலகப் பணிகளை எளிதாகவும், வினைத்திறனாகவும் மாற்றுவதற்காக 2006ஆம் ஆண்டு 19ஆம் இலக்க மின்னணு பரிவர்த்தனை சட்டத்தின்படி, உள்நாட்டலுவல்கள் பிரிவின் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள அதிகாரிகளின் கையொப்பங்களை டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மின்னணு பரிவர்த்தனை சட்டத்தின் விதிகளின்படி டிஜிட்டல் கையொப்பங்களை வழங்கும் அதிகாரம் கொண்ட நிறுவனமாக லங்காபே டுயமெயீயல உள்ளது.

அதன்படி, கடிதங்களைச் செயலாக்குவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்கலாம் மற்றும் மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வைத்தியர் சந்தன அபேரத்ன தெரிவிக்கையில்,

பொது சேவைகளை டிஜிட்டல் மயமாக்கி புதிய பாதைக்கு கொண்டு செல்வதுதான் தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்று தெரிவித்தார்.

மற்றும் மக்கள் எதிர்பார்க்கும் திறமையான பொது சேவையை உருவாக்குவதே தனது நோக்கம் என்றும், இந்த புதிய தொழில்நுட்பத்தை கிராம சேவையாளரிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யப் புரட்சியில்.....

நிலையில் உள்ளார்கள் என்பதே உண்மை. பெரும்பாலான சமயங்களில் பெண்களின் செய்யும் வீட்டு வேலை என்பது பயனற்றது, கடினமானது, காட்டுமிராண்டித்தனமானது! அது எந்த வகையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி செய்யப்போவதில்லை” என லெனின் கூறிய வார்த்தைகள் பிரபல்யமானவை.

பெண்விடுதலை பற்றி லெனின் (டுநநெை ழெ றுழஅநெ நுஅயஉெியவழைெ) என்கிற நூலில், சோவியத் குடியரசில் பெண் தொழிலாளர்கள் இயக்கத்தின் பணிகள் என்ற தலைப்பில் மேற்கூறிய முழு உரையும் பதிவாகியுள்ளது. 1918 இல் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு உரையில், ‘வெறுமனே சட்டங்களால் மட்டும் பெண் விடுதலையை பெற்று விட முடியாது. நகரங்கள் கடந்து கிராமங்கள் தோறும் அரங்கேறும் மதரீதியான பாரபட்சங்களை, பெண் ஒடுக்குமுறையை, விழிப்புணர்வூட்டும் பிரச்சாரங்களும் கல்வியும் மூலமே களையலாம்’ என துல்லியமாகக் கணித்து கூறினார். பல இடங்களில் லெனின் உரைகளும் பெரியாரின் பெண் விடுதலை எழுத்துகளும் ஒத்துப் போகின்றன என்பது நம் அவதானிப்பு.

முதலாளித்துவமும் பெண்களின் உழைப்பும் என்ற தலைப்பில் 1913 இல் ஆற்றிய லெனினின் உரை புரட்சிகரமானது. பெண்களின் உழைப்புச் சுரண்டலின் வடிவம் மட்டும் மாறுகிறது, ஆனால் சுரண்டல் என்பது இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. அடிமைத்தனம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் எல்லாமே இவ்விடயத்தில் ஒரே மாதிரியான தன்மைகளை கொண்டுள்ளன என்பது லெனின் வாதம்.

“நாம் அதிகாரத்துக்கு வந்த முதல் ஓர் ஆண்டுக்குள் செய்த சாதனையில் நூற்றில் ஒரு பங்கைக் கூட, உலகில் பல பத்தாண்டுகளில் எவரும் செய்யவில்லை. இந்தச் சாதனை பற்றிப் பெருமைகொள்ள நமக்கு உரிமை உள்ளது. பெண்களைத் தாழ்வாக நடத்தும் இழிவான சட்டங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை நொறுக்கித் தள்ளிவிட்டோம். ஆனால், கட்டிடம் கட்டுவதற்காக மனையைச் சுத்தப்படுத்தியிருக்கிறோமே தவிர, இன்னும் கட்டிடத்தைக் கட்டிவிடவில்லை என்பதும் நமக்குத் தெளிவாகவே தெரிகிறது!” எனக் கூறிய லெனின், “உண்மையான பெண் விடுதலையிலிருந்தே உண்மையான கம்யூனிஸம் தொடங்குகிறது!” என உரக்கவும் சொன்னார்.

ஒன்பது உரைகளை உள்ளடக்கிய, ‘பெண் விடுதலை பற்றி லெனின்’ என்ற நூல் **( Lenin on Women Emancipation)** தமிழில், ‘ஒரு கோப்பை தண்ணீர் தத்துவமும் காதலற்ற முத்தங்களும்’ என்ற பதிப்பில், கிளாரா ஜெட்கினின் கட்டுரைகளையும் கொண்ட தொகுப்பாக வெளியாகி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2025 வெளியிடப்பெற்றது.